இன்றைய சமுதாய நோக்கில் ஒரு மறுபார்வை

# “சங்கப் பெண் அறிஞர்களின் கவிதைகள்”

“ **வரலாறு என்பதே** மொழியின் வழியே காலம்தோறும் கட்டமைக்கப்படும் புனைவுதான்“ என்று ஆரம்பிக்கிறார் சங்கப்பெண்களின் கவிதைகள் பற்றிய மூலமும் உரையும் எழுதிய ந. முருகேச பாண்டியன் அவர்கள்.

அதாவது சரித்திரம் என்பது ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் வாழ்ந்த மக்களின் உண்மையான சரித்திரம் அல்ல. இன்று நாங்கள் நம்பும் “சரித்திரக்“ குறிப்புக்கள் என்பன அந்தக்காலகட்டத்தில் அந்தச்சமுதாயத்தில் மேலெழுந்தவரியாக நம்பப்பட்ட அல்லது முன்னெடுக்கப்பட்ட சில கருத்துக்களின் அல்லது நம்பிக்கைகளின் தொகுப்பு என்று இன்றைய சமூக அராய்ச்சியாளர்கள் சொல்வதையே திரு ந. முருகேச பாண்டியனும் சொல்கிறார்.

இன்று சமூகம் பல விதங்களிலும் மாறுபட்டிருக்கிறது, வளர்ந்திருக்கிறது, அவையின் மூலங்கள், விஞ்ஞான வளர்ச்சி, பொருளாதார விருத்தி, மாறுபட்ட அரசியல் கருத்துக்கள், பெண்களின் கல்வி விருத்தி என்று பல அடங்குகின்றன.இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதியதாகக்கூறப்படும் நாற்பத்தியொரு பெண்கவிஞைகளின் கவிதைகளை இன்றைய பெண்ணிய நோக்கில் பார்க்கும்போது பல வித்தியாசமான கருத்து வேறுபாடுகளும் கேள்விகளும் வெளிவருவது தவிர்க்கமுடியாததாகும்.

இன்று மனித குலத்தை அடியோடு அழிதொழிக்கும் பல காரணிகளைத் தடுக்க முடியாமற் சமூக நலவாதிகளும் சமூக விஞ்ஞானிகளும் வழி தெரியாமற் திக்கு முக்காடும்போது, இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் சில பெண்கள் எழுதிய என்று சொல்லப்படுபவையும் அவர்களைச்சார்ந்த ஆண்களால் முன்னெடுக்கப்பட்ட கவிதைகளைப்பற்றி மறு பார்வை ஒன்று வைப்பது தேவை என்று சிலர் நம்புவதற்கும் சில காரணங்கள் உள்ளன. அதாவது சங்க காலப் பெண்கள் எழுதிய காதல், காம, தாபம், பிரிவு,விரக்தி, தோல்வி, துயர் பற்றிய கவிதைகள் மூலம் , அக்காலப்பெண்களுக்கு, ஆண்களுக்கு இருந்ததுபோல் “சுய சிந்தனைச் சுதந்திரம் இருந்தது என்று பிரகடனப் படுத்த முயற்சிக்கிறார்கள்.

இக்கவிதைகள் பல்வேறு சமுகச் சூழ்நிலையிலிருந்து வந்த 41 பெண்களால் எழுதப்பட்டிருக்கிறது.
சங்கம் வளர்த்த மதுரை தவிர சேர நாடு, ஆந்திர நாட்டுப் பகுதிகளிலுமிருந்தும் பெண்கள் எழுதியிருக்கிறார்கள். ஒரு காலத்தில் தமிழ் மொழியும் தமிழரின் ஆட்சியும் இப்பகுதிகளில் அமைந்திருந்ததற்கு இக்கவிதைகள் சாட்சியமாகின்றன.
இப்பெண் கவிகளில் ஒரு பரந்து பட்ட சமூகத்தின் வாழ்க்கையோ, வர்க்கமுரண்பாடுகளோ பிரதிபலிக்கப்படவில்லை.
மாறாக, தனிப்பட்ட பெண்களின் அகவுணர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தங்கள் காதல், தவிப்புக்கள் பற்றிய விடயங்களை எழுதினாற்தான் மற்ற ஆண் புலவர்களின் பார்வையும் அங்கிகாரமும் பெண்புலவர்களுக்குக் கிடைத்தா என்பதும் எனது கேள்விகளில் ஒன்று. ஏனென்றால் இந்தப்பெண் புலவர்கள் வாழ்ந்த காலத்திற் சாதாரண பெண்களும் வாழ்ந்திருப்பார்கள். சாதாரண பெண்களைப்பற்றி எந்தத் தகவலும் இந்தச்சங்க காலப் பெண்களின் கவிதைகளில் இல்லாதபடியால், இந்தக்கவிதைகள் ஒரு சரித்திரத்தைப் பிரதிபலிக்கிறது என்று சொல்லி வாதாடத் தேவையில்லை. “சுதந்திரமான“ பெண்மொழியென்ற போர்வைக்குள் எழுதப்பட்ட காதற் கவிதைகளாகவிருக்கலாம்.

தங்கள் உள்ளுணர்வுகளைச் சொல்லிச் சந்தோசப்படவும் மற்றவர்களுடன் கலந்துரையாடவும் உழைக்கும் வர்க்கத்துப்பெண்கள் தயங்குவதில்லை. ஏழைகளின் துக்கம் ஒப்பாரியாக உருவெடுத்து மனதையுருக்கும் வித்ததில் பிலாக்கணமாகப்படுவது யாவருக்கும் தெரியும் . அதேபோல் வீடுகளிலும் வயலில் வேலைசெய்யும் பெண்கள் தங்கள் அக உணர்வுகளை வெளிப்படுத்தப் பாடுபவை நாட்டுப் பாடல்களென்பதும் நாமறிவோம். அப்படியான படைப்புக்கு இங்கு இடமில்லை.

இவர்கள் சங்க காலப் பெண்கள் போல் “மேட்டுக்குடிப்“ பெண்கள் அல்லர். சங்ககாலப் பெண்களின் கவிதைகளை அவதானிக்கும்போது சங்ககாலப்பெண் புலவர்களிற் பலர் ““ மேட்டுக்குடிப்பெண்கள்“ என்பது புலப்படுகிறது. மன்னரின் குடும்பத்தைச் சேர்ந்த (பறம்பு நாட்டின் மன்னன்பாரியின் மகள்கள், பூதப் பாண்டியன் தேவியார், சோழ மன்னன் கரிகால் வளவனின் மகளான ஆதி மந்தி), மன்னர் அல்லது போர்த் தலைவர்களுடன்(ஔவையார்)

இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

சம்பந்தப்பட்ட அல்லது கப்பல் வைத்திருக்கும் வணிகப் பெரு மகனுடன்(பெருங்கோழி நாய்கண் மகள் நக்கணையார்), நிலப் பிரபுக்களின் குடும்பம் (காமக்காணிப் பசலையார்) தொடர்புள்ளவர்கள் என்று அவர்களின் குறிப்பைப் பார்க்கும்போது புரிகிறது.
ஆனாலும் சங்ககாலப் பெண்களின் கவிதைகள் மூலம் பல விடயங்கள் பற்றிய ஒன்றிரண்டு கேள்விகளை முன்வைக்கலாம்.

இச்சங்க காலக்கவிதைகளில் உயர் மட்டத் தலைவர்களும், பிரபுக்களும், போர்த்தளபதிகளும் மன்னர்களும் கதாநாயகராகிறார்கள். அவர்களைப்பிரிந்த துயர்,காணவேண்டிய துடிப்பு,காதல்த்தாபம்,விரக்தி, சோகம், தோல்வி எனப்பல விடயங்கள் தோழிமூலம் பேசப்படுகிறது. சங்க காலத்தில் தோழிகள் இல்லாத பெண்களும் இருந்திருப்பார்கள் அவர்களின் உணர்வை எப்படிச் சொல்வார்கள்?
.

1. சங்ககாலப்பெண்கள் தங்கள் உணர்வுகளைப் பகிரங்கமாகச்சொல்லக் கூடிய சமத்துவமான சமுதாயமிருந்ததா?.
2. பெண்களின் எந்தவிதமான படைப்புக்கும் ஆண்கள் இடம் கொடுத்தார்கள்?.

என்பனபோன்ற சில விடயங்களில் ஆய்வுக்குப் பயன் படக்கூடியவை. சங்ககாலப்பெண்கள் எழுதியதாகச்சொல்லப்படும் கவிதைகளுக்கு இன்று வரலாற்று முக்கியம் பெற ஒரு சில காரணங்களுமுள்ளன என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். ஏனென்றால் மனிதவரலாற்றில் அன்று வாழ்ந்த மக்கள் படைத்த கதைகள், கவிதைகள், நாடகங்கள் என்பவைதான் அன்றைய மக்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை இன்று வந்தோருக்குச் சொல்கின்றன.

“சங்க இலக்கியத்தில் பெண்கள் பாடிய கவிதைகள் பெண்கள் பற்றிய தனித்த அடையாளங்களுடன் வெளிப்படுத்தப்பட்டுள்ளனவா, அன்றைய பொதுப்புத்தி சார்ந்த நிலையில் பெண்மொழி கட்டமைக்கப்பட்டுள்ளதா”? (ந. முருகேசபாண்டியன்,பக்11) என்ற கேள்வியை அவர் கேட்பதின் பின்னணியில் பெரிய விதத்தில் சமூக வளர்ச்சி, மொழிவளர்ச்சி பற்றிய கேள்விகள் தொக்கியிருப்பதையுணரலாம்.

இப்பாடல்கள் பாடப்பட்டதாகச் சொல்லப்படும் காலம், தென்னாட்டுக்கு ஆரிய வருகைக்கு முற்பட்டகாலம். ஜைன, பௌத்த மதங்களும் அம்மதங்களை ஒட்டிய சமத்துவ சிந்தனைகளும் சமுதாயத்திற் பரவியிருந்தகாலம். சங்கம் வளர்த்த பாண்டிய மன்னர்கள் கிரேக்க, உரோம சாம்ராச்சியங்களுடன் வர்த்தகத் தொடர்பு வைத்திருந்த கால கட்டம். எனவே, அக்கால கட்டத்தில் இப்படியான கவிதைகள் எழுதுவது பரவலாக நடந்திருக்கலாம். ஆனாலும் இந்தக்கவிதைகள் அந்தக்காலத்தில் வாழ்ந்த பெரும்பான்மையான பெண்களின் வாழ்க்கையையோ மன உணர்வுகளையோ பிரதிபலிப்பதாகக் கொள்வது சரியாகாது.

சங்ககாலப்பெண் கவிஞர்கள்:
சங்ககாலம் என்பது மூன்று காலகட்டங்களில் இருந்ததாகச் சொல்லப்டுகின்றது.இக்கால கட்டங்களில் கடைசிக் கட்டமான, கி.மு.100 நூற்றாண்டிலிருந்து கி.பி 200ம் நூற்றாண்டு வரையுமுள்ளது கடைச்சங்கம் என்பது ஆராய்ச்சியாளர்களின் கணிப்பு.. அதாவது சங்க காலம் என்பது ஒட்டு மொத்தமாக 9990 வருடங்களுக்கு இருந்ததாகவும் இடைச்சங்கம் கி.மு. 3000-4000 வருங்களில் இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. இது பற்றித் தெளிவான ஆராய்ச்சிகள் செய்யப்படவேண்டும்.

உலகில் மிகவும் பழமையான நாகரீகமான கிரேக்க நாகரிகம். அதை அடிப்படையாக வைத்துத்தான் உலகின் ஐரோப்பிய நாகரீக வளர்ச்சி கணிக்கப்படுகிறது. இந்தியாவிலுள்ள தமிழ் நாட்டில் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் “சங்கம்“ வைத்துக் கவிபாடும் அளவில் சமூகமும் மொழி வளர்ச்சியும் இருந்ததா என்ற கேள்வியை ஆராய்ச்சியாளர்களிடம் விடுதல் நல்லது.மனித குலத்தில் பயிர் செய்யும் அறிவு வந்தபின் தான் நிலம், சொத்து, அதிகாரம், பிரபுத்துவம், வியாபாரம், வணிகம், அடுத்த இனத்துடன் தொடர்பு,போர்(நிலம் சார்ந்த),படை பலம், என்பன படிப்படியாக வளர்ந்தன

கிரேக்க நாகரீகத்தைத்(கி.மு8000-2000) தொடர்ந்து உரோம(கி.மு.2000-கி.பி.5000) நாகரீகம் வளர்ந்தது. அவர்களின் ஆதிக்கம் , வணிகம் உலகெங்கும் பரந்தது. அவர்கள் காலத்திலுள்ள உறவால் தமிழ் நாட்டிலும் பல சமுதாய மாற்றங்கள் வந்திருக்கலாம். பெண்கவிஞர்கள் கவிதைகள் எழுதப்பட்டதாகச் சொல்லும் கால கட்டத்தில், தமிழக அரசர்கள் அவர்களுடன் வர்த்தகத் தொடர்பும் கலாச்சாரத்தொடர்பும் வைத்திருந்ததற்குச் சான்றுகள் நிறைய உள்ளன.
வர்த்தகத்தொடர்புகளுடன் கலாச்சாரப் பரிமாற்றங்களும் நாடுகளுக்கிடையே நடைபெறுவது இயல்பு. அன்றிருந்த மேற்கு நாட்டாரின் பழக்க வழக்கங்கள் தமிழகத்தில் உள்ள வசதி படைத்தோரிடம் பரவியுமிருக்கலாம்.
உரோம இராச்சியத்தில் காதற் கடவுள், தேவதைகள் நிறைய உள்ளனர். காதல் பற்றி வெளிப்படையாக எழுதுவதும் பேசுவதும் நடைமுறையிலிருந்திருக்கலாம்.
இந்த சங்ககாலப் பெண்புலவர்கள் இருந்தகாலம்( எகிப்தில் கிளியோபத்திரா அரசு செய்த கால கட்டம்) தமிழ் மொழியும் கலாச்சாரமும் மற்றவர்களின் ஆளுமைக்குட்படாத கால கட்டம். இருந்தாலும், அந்தக்காலகட்டத்தில் எழுதப்பட்ட கவிதைகள் அன்றைய சமுதாயத்தின் மேலெழுந்தவாரியான நடைமுறைகளைப் பிரதிபலிப்பதில் ஆச்சரியம் இல்லை.

மற்றவர்களால் அடிமை கொள்ளப்படாவிட்டாலும் சிறு மன்னர்கள் ஒருத்தருக்கொருத்தர் தொடுத்த போரின் பின் புலம் பல கவிதைகளிற் பிரதி பலிக்கின்றன. பெண் கவிஞர்கள் பாடிய காதல், காமம் பற்றிய கவிதைகள், போருக்கு அல்லது திரவியம் தேடி அயலூர் சென்ற காதலனை உற்சாகப்படுத்தவும் பயன் பட்டிருக்கும். போரின் உக்கிரத்தில் வீரம் காட்டும் காளைக்குத் தன் காதலியின் துயரும், அவனைப் பிரிந்த வேதனையும் அவள் அவனை எவ்வளவு தூரம் காதலிக்கிறாள் என்பதை அளவிடவும் துணைசெய்திருக்கும்.

மிகுதி அடுத்த இதழில்...

# பாலுமகேந்திராவிற்கு விழா



**இலங்கை மட்டக்களப்பில்** பிறந்து தமிழக சினிமா ஏன் இந்திய சினிமாவையே ஒரு கலக்குகலக்கியவர் பாலுமகேந்திரா.

இவர் சினிமாத்துறைக்குவந்து நாற்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் இவர் இயக்கிய படங்கள் இருபத்துஆறு மட்டும். மூன்றாம்பிறை, மூடுபனி போன்ற படங்கள் குறிப்பிடத்தக்க படங்களாகும் சென்னையில் இவரின் பாராட்டுவிழாவிற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இந்தவிழாவை ரஜனிகாந்த் தொடக்கிவைக்கிறார். கமல்ஹாசன், பாரதிராஜா, மணிரத்தினம் போன்றோர் கலந்துகொள்கிறார்கள். விழாவின் ஒருபகுதியாக KTO என்ற பெயரில் ஒரு திரைப்படவிழாவுக்கும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. கோகிலா முதல் கனாகாலம்வரை என்ற பொருள்பட இவர் முதல் இயக்கியபடம் கோகிலா (கன்னடம்). இவர் கடைசியாக இயக்கிய படம் அது ஒரு கனாகாலம்.